<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 43/2022**

2024 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் நாள் திங்கட்க்கிழமை என்பவரது சாட்சியாகிய சசிகலா **PW. 1** இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 30.09.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | சசிகலா PW1 | | |
| Husband Name | : | பாபு | Court | : |
| Village | : | திருக்கடையூர் | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 49 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:-</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

02.07.2008 தேதியிட்ட விட்டோபா என்பவர் எழுதிவைத்த உயிலின் அசல் **வா.சாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.02.2022 தேதியிட்ட விட்டோபாவின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.